செயற்பொறியாளர், பொ.ப.து., நீஆ.து, நிலநீர் கோட்டம், திருச்சி அவர்களின் செயல்முறைகள்

முன்னிலை : திரு.சி.தி.சண்முகம்,எம்.இ.,
செயற்பொறியாளர், பொ.ப.து.,

செயல்முறை ஆணை எண்: நி.உ.2 / 01/ 2019/ நாள்: 03.06.2019

பொருள்: பணியமைப்பு - த.நா.அ.ப.தொகுதி - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதி IV ன் மூலம் செல்வி.சு.லாவண்யா மற்றும் திருமதி. வீ.கவிப்பிரியா ஆகியோர் இளநிலை உதவியாளர்களாக பணியமர்வு செய்யப்பட்டனர். இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் - தொடங்கி ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடித எண்: 1150/PSD-H2/2019/நாள்:18.02.2019.
2. முதன்மை தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது)பொபது, சேப்பாக்கம், சென்னை-5 அவர்களின் செயல்முறை ஆணை எண் எஸ்3(3)/25366/2019/நாள்:25.02.2019.
3. தலைமைப்பொறியாளர், நீ.ஆ.து(பொபது) நிலநீர், தரமணி, சென்னை-113 அவர்களின் செ.மு.ஆ.எண் இ2(4)/1660(a)/2019/ நாள்:06.03.2019.
4. மேற்பார்வை பொறியாளர், பொபது, நீ.ஆ.து, நிலநீர் வட்டம், தஞ்சாவூர் அவர்களின் செ.மு.ஆ.எண் அ2/296/2019/நாள்:08.03.2019.

******

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018 ஆம் ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்கான தேர்வு தொகுதி IV ன் மூலம் இளநிலை உதவியாளராக தேர்வு செய்யப்பட்டு பார்வை 2 முதல் 4 வரை காணும் செயல்முறை ஆணைகளின்படி தமிழ்நாடு அமைச்சு பணி தொகுதியின் கீழ் இளநிலை உதவியாளராக இவ்வலுவலகத்தில் பணியேற்ற நாளான 08.03.2019 பி.ப முதல் தமிழ்நாடு மாநில சார்நிலை பணி விதி தொகுதி 23(a) இன் கீழ் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைபடுத்தி ஆணை வழங்கப்படுகிறது. மேலும் இவர்களுக்கு பணிவரன்முறை செய்யப்பட்ட 08.03.2019 பி.ப முதல் தொடர் மூன்றாண்டுக்கு உட்பட்ட இரண்டு ஆண்டு பணிக்காலம் தகுதிகாண் பருவகாலமாக தமிழ்நாடு பணி விதி தொகுப்பு III ல் விதி 12ன் கீழ் நிர்ணயித்து ஆணை வழங்கப்படுகிறது.

இளநிலை உதவியாளர்கள் செல்வி.சு.லாவண்யா, திருமதி.வீ.கவிப்பிரியா ஆகியோர் (தகுதிகாண் பருவத்தினர்) மீது ஒழுங்கு நடவடிக்கையோ /குற்றச்சாட்டுகளோ ஏதும் நிலுவையில் இல்லை எனச் சான்றளிக்கப்படுகிறது.

7/6/19

செயற்பொறியாளர்,பொபது,
நிலநீர் கோட்டம்,
திருச்சி-20.

4/6/19

பெறுநர்:

1. செல்வி.சு.லாவண்யா,
   இளநிலை உதவியாளர்,
   நிலநீர் கோட்டம்,
   திருச்சி-20.

2. திருமதி.வீ.கவிப்பிரியா,
   இளநிலை உதவியாளர்,
   நிலநீர் கோட்டம்,
   திருச்சி-20.